IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 176/2021

P.W.2 - Tr.Palanisamy

DATE - 19.11.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.11.2025.

வா.சா.2 குறுக்கு விசாரணை -

வாதி ராஜாசெல்வேந்திரன் நான் எந்த பைனாஸ்லும் பங்குதாரர் இல்லை நானும் எந்த பைனாஸ்ம் நடத்தவில்லை. நான் ஆடிட்டிங் தொழில் செய்து வருகிறேன். வாதி எனக்கு நண்பர். எனக்கு கிரியை தெரியும். எங்கள் பகுதிக்கு அப்ப அப்ப வந்த போர்அப்போது எனக்கு தெரியும். கிரிக்கு சுமாராக 37-38 வயது இருக்கும். வாதி வீட்டில் வைத்து கிரியும் ஜானகி அம்மாவும் கடன் வாங்கினார்கள். வாதி அவருடைய வீடான நல்லூர் பேட்டையில் வைத்து கிரி மற்றும் ஜானகி அம்மாவுக்கு பணத்தை கொடுத்தார் அப்போது 12 மணிக்கு மேல் இருக்கும். வாதி மேற்படி பணம் கொடுக்கும் நான் கிரி ஜானகி அம்மா இருந்தோம் வேறுயாரும் அப்போது உடன் இல்லை. பணம் கடனாக வாங்கும் போது கிரி ஜானகி அம்மாவும் புரோனோட் எழுதி கொடுத்தார்கள் அதில் நான் சாட்சியாக இருந்தோன். புரோனோட்ல் பணம் வட்டி விவரங்கள் எழுதப்பட்டிருந்தது. புரோனோட்டில் நான் 2வதாகவும் செந்தில்குமார் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். புரோனோடை எழுதியவர் யார் என்று தெரியாது கிரியே புரோனோட் எழுதுவதற்கு அழைத்துவந்தார். நான் செல்வது போல் வாதி கிரி ஜானகிக்கு எவ்வித பணமும்

கடனாக கொடுக்கவில்லை என்றும் செந்தில் குமார் நடத்துகின்ற பைனான்ஸ்ல் நானும் வாதியும் பங்குதாரர்கள் என்பதால் வாதிக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடனை வாதி 500,100 நோட்டுகள் கலந்து கிரி ஜானகி கொடுத்தார. பணத்தை நான் எண்ணி பாக்கவில்லை ஆனால் வாதி பணம் கொடுக்கும் போது நான் பார்த்தேன். கிரி இறந்துவிட்டார் என்று பின்னால் தெரிந்து கொண்டேன். கிரியே என்னை சாட்சியாக இருப்பதற்கு அழைத்து சென்றார். கிரி என்னை சாட்சியாக அழைத்து செல்லவில்லை என்றும் செந்தில் குமாருக்கு ஆதராவாக வாதியும் நானும் பொய் சாட்சியம் அளிக்கிறேம் என்றால் சரியல்ல. நான் எவ்வித பண பரிவர்தனையும் வாதிக்கும் கிரி ஜானகி அம்மாவுக்கும் நடைபெறவில்லை என்றும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.19 20:02:24 +0530

Additional District Judge(FTC),

Vellore.